முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி மாசி மாதம் 5ம் திகதி முதல் மாசி மாதம் 12ம் திகதி வரை**

**பிப்ரவரி 17ம் திகதி முதல் பிப்ரவரி 23ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **ஞான சக்திமிகு பாரதமே**
**ஞானிகளை கொண்ட தமிழகமே**
**தானதரும பலம் குறைவிலா**
**தமிழகம் இந்தியா தன்னில்**

**2.** **தன்னிலே விளம்பி சாலின் திங்கள்**
**தக்க பஞ்சதிகதி மேல் விய திகதி வரை**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 5ம் நாள் 17.02.2019, ஞாயிறு முதல் மாசி மாதம் 12ம் நாள் 24.02.2019, ஞாயிறு முடிய)**
**நன்னயமாய் நடக்கும் வார நிகழ்வாக**
**நாட்டிடுவேன் எதிர்கால பலன் குறித்த ஆசி**

**3.** **ஆசிதனை சுப்பிரமணியர் யானும்**
**அருளுவேன் வார ஆசி பலனாக**
**தூசிபடும் அரச துறைகளெல்லாம்**
**தூய்மைப்படுத்த பட வேண்டுமினி**

**4.** **இனிமைபட மக்களை நோக்கிய**
**எல்லாத் துறை சேவைகளும்**
**கனிவுபட நடத்தப்பட வேண்டும்**
**களவெனும் கையூட்டு இல்லாது இயங்கவே**

**5.** **இயங்கவே இந்தியா தமிழகம்**
**இனி வரும் காலம் வளர நேரும்**
**தயங்காது உரிமைகள் யாவும்**
**தானாகவே சரிசெய்யப்பட வேண்டும்**

**6.** **வேண்டுமென அரசியல் பதவிகள் வழி**
**விரயமாகும் செலவு நிதிகளையும்**
**உண்டான அரசு கட்டுப்படுத்தி**
**உண்மைபடவும் எளிமைபடவும் இயங்க வகை**

**7.** **வகை செய்தும் வசதிநிலை குறைக்க**
**வளரும் திட்டங்கள் வழி நிதிகள்**
**மிகைபட சேர்ந்து வளம் பெறும்**
**முன்னேற்ற பொருளாதார நிலை காணும்**

8. காணுமே மக்களை நோக்கிய
கட்டாய வரிச்சுமை குறைந்து
ஞானவான் தருமவான் ஆட்சியாக
நடுவணும் தமிழகமும் உயர்ந்து

9. உயர்ந்து வளரும் நாடுகளுள்
உண்மைபட முன்னிலை பெறும்
தயவை மறந்த அரசு கெடும்
தாமுரைப்பேன் அன்னதனால் ஆளுமைகள்

10. ஆளுமைகள் துறையூர் மண்ணில்
ஆறுமுக அரங்கஞானி காட்டும்
வலுவான ஞானவழிக்கு வர
வல்லமையான ஞானஆட்சியாக மலரும் வார ஆசி நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் மாசி மாதம் 5ம் நாள் 17.02.2019, ஞாயிறு முதல் மாசி மாதம் 12ம் நாள் 24.02.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

சக்திமிக்க ஞானத்தை மிகுதியாக கொண்டிட்ட பாரததேசமே ஞானிகளை தன்னகத்தே கொண்டிட்ட தமிழகமே தானதரும பலம் குறையற்ற தமிழகத்திலும் இந்தியாவிலும் விளம்பி வருடம் மாசி மாதம் 5ம் நாள் 17.02.2019, ஞாயிறு முதல் மாசி மாதம் 12ம் நாள் 24.02.2019 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

கறைபடுகின்ற அரசு துறைகளும், செயல்பாடு இல்லாமல் மெத்தனமாக நடக்கின்ற அரசு துறைகள் எல்லாம் இனி தூய்மைப்படுத்தப்பட வேண்டும். மக்களுக்கு எல்லாத் துறைகளும் கனிவுபட சேவை நோக்கில் செயலாற்ற வேண்டும். அரசின் எல்லா துறைகளும் களவு என்கிற கையூட்டுகள் இல்லாது இயங்கிட வேண்டும். அவ்விதம் அரசின் எல்லாத் துறைகளும் கையூட்டு இல்லாமல் நடத்தப்படுமாயின் இந்தியாவும், தமிழகமும் இனிவரும் காலமெல்லாம் அற்புதமான வளர்ச்சிகளை கண்டு முன்னேற்றமும் அடையும். மக்களுக்கான தனிமனித உரிமைகளும், மாநிலங்களுக்கான உரிமைகளும் தானாகவே சரி செய்யப்பட வேண்டும்.

அரசியலில் பங்கு கொள்ளும் அரசு சார்ந்தவர்கள் அரசியல் வழியினால் ஆன பதவிகள் மூலமாக அரசியலுக்காக செய்யப்படும் செலவுகளும், அரசியல் பதவிகளினால் செய்யப்படும் செலவுகளும் அரசினால் கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டு அரசு உண்மையான செலவுகளை அங்கீகரிக்கவும் அரசு பதவிகளில் உள்ளோர் உண்மையாகவும் எளிமையாகவும் இயங்கிட வேண்டும். அரசியல் பதவி வகிப்போரும் உண்மையுடனும் எளிமையுடனும் கட்டுப்பாட்டுடன் இயங்கி வகை செய்திட வேண்டும்.

அரசு பதவிகளிலும் அரசியல் பதவிகளிலும் ஆடம்பர செலவுகளை குறைத்து தேவையற்ற வசதிகளை குறைத்திட அரசு போடும் திட்டங்களான நிதிகள் பெருகி அரசு வளர்ச்சி பெறும், நாடும் வகைபட வளம் பெறும். அரசும் பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடையும்.

இவ்விதமே அரசு நடந்து கொண்டால் சாதாரண மக்கள் மீது அரசு தேவையற்ற வரிகளை விதிக்க வேண்டிய அவசியம் ஏற்படாமல், மக்களுக்கு விதிக்கப்படும் வரிகள் குறைக்கப்பட்டு மக்கள் மீது திணிக்கப்படும் வரிச்சுமை குறையும். மக்கள் அரசினை வாழ்த்திட ஞானவான் தருமவான் ஆட்சியாக அரசு பெயர் பெற்று மத்திய அரசும் தமிழக அரசும் உயர்வான நிலையை அடைந்து வளரும் நாடுகளுள் உண்மையான நேர்மைமிக்க நாடாக ஆகி முன்னிலை பெறும்.

அதைவிடுத்து மக்கள் மீது தயவு இல்லாமல் நடந்து கொள்ளும் அரசு கெடுவதற்கான வாய்ப்புகள் ஏராளம். ஆதலினால் ஆட்சி புரிவோர் தருமத்தின் வழி நடக்கும் துறையூர் வாழ் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டும் தயவின் அடிப்படையினால் ஆகிய வலிமைமிக்க ஞானவழிக்கு வந்து செயல்பட ஆட்சியானது வல்லமைமிக்க தயவே வடிவான ஞானஆட்சியாக மாறி மக்களும் நாடும் செழித்து வளர்ந்து மேன்மை அடையும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறியக் கூறுகிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–